(ஆ). துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெறுவதற்கு வசூலிக்கும் கட்டணத்தைச் சீராக்குவது குறித்து.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ்—

"மின் கட்டணம் கட்ட முடியாத நிலையில் இணைப்பு துண்டிக்கப்பட்டு மீண்டும் இணைப்புக் கொடுக்கும்போது தண்டக் கட்டணமாக ரூ. 6, 9, 12 என்றவாறு உயர்த்திக் கொண்டே போவதைத் தடுக்க ஒரே சீராக ஆறு ரூபாய்க்குக் கீழ் நிர்ணயிப்பது குறித்து". என்ற

அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போது மின்சக்தியை பயன்படுத்துவோருக்கு துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெறுவதற்கு மின்சார வாரியம் வசூலிக்கும் கட்டணங்கள் பின்வருமாறு—

1. 75 கிலோ வாட் வரை இணைக்கப்பட்ட திறன்

	ரூபாய்.
(அ) இறுதி முனை இணைப்புகள் (cut outs)	6.00
(ஆ) கம்பத்தின் மீதுள்ள இணைப்புகள்	12.00

2. 75 கிலோ வாட் திறனுக்கு மேலுள்ள இணைப்புகளுக்கு மேற்கண்ட கட்டணங்கள் இரு மடங்காகும்.

3. 12 மாத இடைவெளிக்குள் இரண்டாவது முறை மீண்டும் இணைப்புக் கொடுக்க நேரிட்டால் மேற்கண்ட கட்டணங்கள் மேலும் 50 சதவீதம் உயரும்.

2. மேற்கண்ட கட்டணங்கள் மின்சார வாரியத்திற்கு இணைப்புகளைத் துண்டிப்பதற்கும் மீண்டும் இணைப்புக் கொடுப்பதற்கும் ஏற்படும் பணிக்கான செலவை ஈடு கட்டுவதற்காகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை மின் கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்தாமல் அடிக்கடி தாமதம் செய்வதை தவிர்க்கும் நோக்குடன் அமைந்ததாகும். இவை மின்வாரியத்தின் வருவாயை பெருக்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டவை அல்ல. ஆகவே, இக்கட்டணங்களை குறைப்பது சாத்தியமல்ல.

1977 ஜூலை 15]

திரு. மா. மணிமாறன் : மின் இணைப்புத் துண்டிக்கிறபோது அங்கே இருக்கிற ப்யூஸ் காரியரைத்தான் எடுத்துவிட்டுப் போகிறார்கள். வேறு ஆக்கபூர்வமான வேலை எதுவும் இல்லை. இதற்கு 6 ரூபாய், 9 ரூபாய், 12 ரூபாய் என்று தண்டம் வசூலிப்பது, ஏற்கனவே தண்ணீர் வராமல் மிகவும் கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கிறது. விவசாயத்தில் மிக அதிகமான செலவுக்கு உள்ளாகி கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு இந்தத் தண்டத் தீர்வையையாவது ஒரே சீராக ஆக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டிவிட்டால் அது கூட செலவு இல்லாமல் போய் விடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் மின்சாரக் கட்டணத்தை உரியநேரத்தில் கட்டிவிடவேண்டும் என்று சொல்வது நல்லது. ப்யூஸ்காரியரைத் தான் எடுக்கிறார்கள் என்றாலும், அதை எடுப் பதற்கு ஒரு ஆள் போக வேண்டியிருக்கிறது, திரும்ப எப்போது பணம் கட்டப்படுகிறதோ அப்போது மறுபடியும் அங்கே சென்று ப்யூஸ் காரியரைப் போடவேண்டியதாக இருக்கிறது.

(முற்பகல் 9.30)

திரு. மா. மணிமாறன் : வருமான பாக்கிகள் அதிகமாக இருக்கின்ற நேரத்தில், வசூலிப்பதற்கு அவகாசம் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள் குறைவான 'பவரை' பயன் படுத்துகிற ஏழை விவசாயிகளின் கட்டணத்தைக் கொஞ்சம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் இணைப்பை வைத்து பயன்படுத்துகிறவர்கள் அவ்வளவு ஏழைகள் அல்ல. எனவே அத்தகைய உத்தேசம் இல்லை.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜக்கமங்கலம், முட்டம், குளச்சல் வாய்க்கால்களில் நிலங்களுக்குப் போதிய நீர் கிடைக்காமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. ஆதிசாமி அவர்கள் சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.